பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
19 09 2026 SATURDAY 6 45 AM
வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மத்திய அரசின் பல்வேறு துறைகளுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 51 ஆயிரம் பேருக்கு பணிநியமன கடிதங்களை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று வழங்கவுள்ளார்.

2. வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்ட கல்வி நிறுவனங்கள் உரிய பங்களிப்பை வழங்க வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் திருமதி. Raksha Khadse கேட்டுக் கொண்டுள்ளார்.

3. தமிழகத்தில் அரசு கல்லூரிகளில் காலியாக உள்ள ஆறாயிரம் உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

4. மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் இறுதிப்பட்டியல் இன்று வெளியிடப்படுகிறது

5. ஆசிய விளையாட்டுப் போட்டிகள், வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் ஜப்பானில் இன்று தொடங்குகிறது.

>>>>>>>><<<<<<<

மத்திய அரசின் பல்வேறு துறைகளுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 51 ஆயிரம் பேருக்கு பணிநியமன கடிதங்களை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று வழங்கவுள்ளார்.

இதுதொடர்பாக நடைபெறவுள்ள வேலைவாய்ப்பு திருவிழாவில் அவர், காணொலி வாயிலாக பங்கேற்று உரையாற்றவுள்ளார்.

இதற்காக நாடுமுழுவதும் 45 இடங்களில் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

நிதி, ரயில்வே, பாதுகாப்பு, உள்துறை, சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை என மத்திய அரசின் பல்வேறு துறைகளின் காலியாக உள்ள பணியிடங்களை மத்திய அரசு நிரப்பி வருகிறது.

இதுவரை நடத்தப்பட்டுள்ள பிரதமரின் வேலைவாய்ப்பு திருவிழாவில், 12 லட்சத்து 75 ஆயிரம் பேருக்கு பணிநியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சென்னை அரும்பாக்கத்தில் உள்ள தனியார் கல்லூரியில் நடைபெறும் வேலைவாய்ப்பு திருவிழாவில் தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கலந்து கொண்டு பணிநியமன கடிதங்களை வழங்கவுள்ளார்.

>>>>>>>><<<<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்ட கல்வி நிறுவனங்கள் உரிய பங்களிப்பை வழங்க வேண்டும் என்று மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை இணையமைச்சர் திருமதி. Raksha Khadse கேட்டுக் கொண்டுள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற துணைவேந்தர்களுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பேசிய அவர், இளைஞர்கள் நலன் சார்ந்த முன்முயற்சிகளில் உயர்கல்வி நிறுவனங்களின் பங்களிப்பு அதிகரிக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்களிப்பையும், அவர்களின் தலைமைப் பண்பையும் ஈடுபடுத்தும் வகையில் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களுக்கு பல்கலைக் கழகங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று திருமதி. Raksha Khadse கேட்டுக் கொண்டார்.

>>>>>>>><<<<<<<

தமிழகத்தில் அரசு கல்லூரிகளில் காலியாக உள்ள ஆறாயிரம் உதவிப் பேராசிரியர் பணியிடங்களை நிரப்ப விரைவில் தேர்வு நடத்தப்படவுள்ளதாக உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்டம் காட்பாடியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், 2 ஆயிரத்து 700க்கும் மேற்பட்ட உதவிப் பேராசிரியர்கள் விரைவில் பணியமர்த்தப்படுவார்கள் என்று கூறினார்.

கடந்த ஆட்சியில் துணைவேந்தர்களை நியமிப்பது தொடர்பாக ஆளுநருக்கும், மாநில அரசுக்கும் கருத்து வேறுபாடுகள் இருந்ததாகவும், ஆனால் தற்போது அந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண, மாநில அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பான வழக்குகளில் உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் இன்னும் முடிவெடுக்காத நிலையில், துணைவேந்தர் நியமனத்திற்கு விரைவில் நல்ல முடிவு ஏற்படும் என்றும் திரு. விஸ்வநாதன் கூறினார்.

>>>>>>>><<<<<<<

ஹிந்தி உட்பட எந்த மொழியையும் திமுக எதிர்க்கவில்லை என்றும், இருமொழிக் கொள்கையைத் தான் வலியுறுத்தி வருவதாகவும் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

நவோதயா பள்ளிகளை அனுமதிப்பது தொடர்பான வழக்கில், தமிழ்நாடு ஹிந்தி மொழிக்கு எதிரான மனநிலையை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று உச்சநீதிமன்றம் சமீபத்தில் தெரிவித்த கருத்து குறித்து அவர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அந்தந்த மாநிலங்கள், தாங்கள் விரும்பும் மொழிக் கொள்கையை பின்பற்ற அனுமதிப்பதே நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு வலுசேர்ப்பதாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நவோதயா பள்ளிகளை அனுமதிப்பது தொடர்பான விஷயத்தில் தற்போதுள்ள மாநில அரசு உறுதியான வாதங்களை உச்சநீதிமன்றத்தில் எடுத்துரைக்க வேண்டும் என்றும் திரு. உதயநிதி ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>>>><<<<<<<

மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் இறுதிப்பட்டியல் இன்று வெளியிடப்படுகிறது.

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் தொகுதியில் திமுக, அஇஅதிமுக, த.வெ.க., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், நாம் தமிழர் கட்சிகளின் வேட்பாளர்கள் உள்ளிட்ட 48 பேர் மனுதாக்கல் செய்தனர். அவர்களில் 28 பேரின் மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன.

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் தொகுதியில் பிரதான அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் உட்பட 53 பேர் மனுதாக்கல் செய்த நிலையில், மனுக்கள் பரிசீலனையின் போது, 22 மனுக்கள் ஏற்கப்பட்டன.

இந்நிலையில், மனுக்களை திரும்பப் பெற இன்று கடைசி நாளாகும். இதையடுத்து இறுதி வேட்பாளர் பட்டியல் இன்று வெளியிடப்படுகிறது.

>>>>>>>><<<<<<<

திருவண்ணாமலை மாவட்டம், மேல்மா கிராமத்தில் சிப்காட் அமைக்க நிலங்களை கையகப்படுத்த பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கையை மாநில அரசு திரும்பப் பெற்றுள்ளது.

கடந்த ஒன்றாம் தேதி வெளியிடப்பட்ட தமிழ்நாடு அரசிதழில் செய்யாறில் உள்ள சிப்காட் தொழிற்பூங்காவின் மூன்றாவது கட்ட பணிகளுக்கான, மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையின் பேரில், மேல்மா கிராமத்தில் நிலங்களை கையகப்படுத்த அறிவிக்கை வெளியிடப்பட்டதாகவும், ஆனால் அந்த அறிவிக்கை திரும்பப் பெறப்படுவதாகவும் மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலம் கையகப்படுத்துவதற்கு விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தி வந்த நிலையில், இந்த முடிவை மாநில அரசு எடுத்துள்ளது.

>>>>>>>><<<<<<<

நீலகிரி, கோவை, கிருஷ்ணகிரி, தருமபுரி, ராணிப்பேட்டை உள்ளிட்ட 11 மாவட்டங்களின் ஒரு சில இடங்களில் இன்று இடிமின்னலுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதர மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்கள், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், சேலம், ஈரோடு, நாமக்கல் உள்ளிட்ட 16 மாவட்டங்களில் இடிமின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சிவகங்கை, ராமநாதபுரம், தூத்துக்குடி மாவட்டங்களில் பலத்த காற்றுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒரு சில பகுதிகளில் இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

>>>>>>>><<<<<<<

இருவரிச் செய்திகள்

ரஷ்யா மற்றும் ஈரான் மீது கூடுதலாக பொருளாதார தடை விதிக்கும் சட்டத்தில் அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கையெழுத்திட்டுள்ளார்.

>>>>>>>><<<<<<<

ரஷ்யாவில் உள்ள *Kursk* அணுமின் நிலையத்தின் மீது யுக்ரைன் ட்ரோன் தாக்குதல் நடத்தியதற்கு சர்வதேச அணுசக்தி முகமை கண்டனம் தெரிவித்துள்ளது.

>>>>>>>><<<<<<<

ஹரித்வாரில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள கும்பமேளாவிற்கு மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து, உத்ராகண்ட் மாநில காவல்துறை தலைமை இயக்குநர், நேற்று உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

>>>>>>>><<<<<<<

2025-26ஆம் நிதியாண்டின் நாட்டின் மென்பொருள் சேவை ஏற்றுமதி எட்டு புள்ளி இரண்டு சதவீதம் அதிகரித்துள்ளது.

>>>>>>>><<<<<<<

ராமநாதபுரம் மாவட்டத்தில் கடல் உணவு பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் வகையில் மாவட்ட ஏற்றுமதி மேம்பாட்டுக் குழு சார்பில் ஏற்றுமதி விழிப்புணர்வு கூட்டம் நேற்று நடைபெற்றது.

>>>>>>>><<<<<<<

தூத்துக்குடியில் பிரதமரின் மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ், மீனவப் பெண்களுக்கு இருசக்கர வாகனத்துடன் கூடிய குளிர்காப்பு பெட்டிகளை மீன்வளத்துறை அமைச்சர் திரு. ஸ்ரீநாத் நேற்று வழங்கினார்.

>>>>>>>><<<<<<<

காரைக்காலில் நேற்று நூற்றுக்கும் மேற்பட்ட விநாயகர் சிலைகள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, கடலில் கரைக்கப்பட்டன.

>>>>>>>><<<<<<<

பிரயாக்ராஜ் - நெல்லை இடையே இன்று முதல் அடுத்த மாதம் 10ஆம் தேதிவரை சனிக்கிழமை தோறும் சிறப்பு ரயில் இயக்கப்படவுள்ளதாக ரயில்வே தெரிவித்துள்ளது.

>>>>>>>><<<<<<<

சென்னையில் விநாயகர் சிலைகளை கரைக்க மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளை மாநகராட்சி ஆணையர் திரு. சமீரன் நேற்று நேரில் ஆய்வு செய்தார்.

>>>>>>>><<<<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய விளையாட்டுப் போட்டிகள், ஜப்பானில் இன்று தொடங்குகிறது.

அடுத்த மாதம் 4ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இந்தப் போட்டிகள் ஜப்பானின் *Aichi* மாகாணத்தின், *Nagoya*-வில் நடைபெறவுள்ளது.

இதில் 43 பிரிவுகளில், 45 நாடுகளைச் சேர்ந்த 11 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

இந்தியா சார்பில் 36 பிரிவுகளில், 496 பேர் கலந்து கொள்கின்றனர்.

இப்போட்டிகள் இன்று பிற்பகல் ஜப்பானின் *Nagoya* நகரில், பாரம்பரிய கலைநிகழ்ச்சிகளுடன் தொடங்குகின்றன.

தொடக்க விழா அணிவகுப்பின் போது, இந்தியா சார்பில் தேசியக் கொடியை மனுபாக்கர் மற்றும் *Tajinderpal Singh Toor* ஏந்திச் செல்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், கிரிக்கெட் உள்ளிட்ட அதிக நேரம் நடைபெறும் விளையாட்டுகள் ஏற்கனவே தொடங்கிவிட்டன.

>>>>>>>><<<<<<<

உலக கோப்பை ஜூனியர் துப்பாக்கிச் சுடும் போட்டியின் Trap பிரிவில், இந்தியாவின் யோகன் சக்திவேல் முத்துக்குமார் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

இத்தாலியில் நடைபெற்று வரும் இப்போட்டியின், மகளிர் பிரிவில் இந்தியாவின் Sabera Haris இறுதிப்போட்டிக்கு முன்னேறிய போதும், நுலிழையில் பதக்க வாய்ப்பை தவறவிட்டார்.

இதேபோல், பவ்யா திருப்பதி, Krishaka Joshi ஆகியோரும் இறுதிப்போட்டியில் பதக்க வாய்ப்பை தவறவிட்டனர்.

>>>>>>>>END<<<<<<<